விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 5 துல்ஹஜ்தா 24 இதழ் 150

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21-7-1987

இராணுவ நடவடிக்கைகள்

யாழ் மாநகரசபை வருமானத்தில்

## ஒருகோடி பத்துலட்சம் வீழ்ச்சி

### சட்டவிரோத மின்பாவனையால் 50 லட்சம் வீழ்ச்சி!

(எம். வாமதேவன்)

இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கடந்த வருட வருமானத்தில் சுமார் ஒரு கோடியே பத்துலட்சம் ரூபா வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ். மாநகரசபைக்கு கிடைக்க வேண்டிய பொது வருமானத்தில் அறுபது லட்ச ரூபாவும், சட்ட விரோத மின் பாவனையால் ஐம்பது லட்ச ரூபாவும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ். கோட்டை இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதல், துப்பாக்கிப்பிரயோகம் பொம்மர் விமானக் குண்டு வீச்சு ஆகியவற்றினால் யாழ். நகர் வர்த்தக நிலையங்கள், தியேட்டர்கள், சந்தைகள் நகருக்கு அப்பால் வேறிடங்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ் நகரில்

# பூரி-பிரபா சந்திப்பு



விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை பூரி சந்தித்தபொழுது எடுத்த படம்.

(நமது அலுவலக நிருபர் என். கே. துரைசிங்கம்)

**யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய ஸ்தானிகராலய முதலாவது செயலர் திரு. எச். எஸ் பூரியை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கதலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று முன்தினம் சந்தித்த உரையாடினர். இவருடன் த.ஈ.வி.பு. இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.**

யாழ்நகரில் அந்தரங்கமான முறையில் நீண்டநேரம் திரு. பூரிக்கும் திரு. வே. பிரபாகரனுக்குமிடையிலான இச்சந்திப்பு நேற்று முன்தினமிரவு ஒன்பது மணியளவில் இடம் பெற்றது.

அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் இ. திலீபன், வன்னிப் பிராந்திய தளபதி மாத்தயா, யாழ். குடாநாட்டுத் தளபதி குமரப்பா, வலிகாமம் பொறுப்பாளர் ஜொனி மற்றும் யோகி, சங்கர் ஆகியோர் இச்சந்திப்

[5ம் பக்கம் பார்க்க]



பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகள் இயக்க உள்ளூர் தலைவர்களும் திரு. பூரியும்.

## 'பொடிபுத்தா' குடும்பத்தினர் தயவான வேண்டுகோள்

(கொழும்பு)

'பொடிபுத்தா' என்றழைக்கப்படும் திரு. முதியான்ஸே தென்னக்கோனை எதுவித துன்புறுத்தல்களுக்கும், பாதிப்புக்கு முள்ளாக்கவேண்டாம் என்று அவரது உறவினர்கள் தயவான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

'ஈழநாடு' மூலமாகவே திரு முதியான்ஸே தென்னக்கோன் குடும்பத்தினர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பிவைத்துள்ளகடிதத்தில் குறிப்பிடப் படடிருந்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் ஒருசாரரால் திரு முதியான்ஸே தென்னக்கோன் கடத்தப்பட்டுள்ளார் என்ற தகவல் கிடைத்துள்ளது இச்சம்பவம் உண்மையானால் இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பானவர்களிடம் திரு. தென்னக்கோனை எதுவித துன்புறுத்தல்களுக்கும் பாதிப்புக்குமுள்ளாக்க வேண்டாமெனக் குடும்ப அங்கத்தவர்களென்ற ரீதியில் அவர்மீது கொண்ட பாசத்தின் காரணமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

(5ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் அறம் தலைமையில் பாதயாத்திரை

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி டாக்டர் அறம் தலைமையிலான ஏழு

(5-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இன்று அல்லது நாளை பேச்சுக்கள்

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்த இலங்கையரசின் புதிய யோசனைகள் குறித்து இந்திய தரப்பினர் இன்று அல்லது நாளை பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை இனப்பிரச்னைத் தீர்வில் பங்குகொண்டுள்ள முக்கிய சிரேஷ்ட அமைச்சர்களும், உயரதிகாரிகளும், இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் திரு டிக்ஸிற்றும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

25ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. உயர்தர பரீட்சை:

## யாழ் குடாநாட்டில் 9 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுவர்

[அலுவலக நிருபர்]

எதிர்வரும் 25ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ த. [உயர்தர] பரீட்சைக்கு யாழ். குடாநாட்டிலிருந்து 9000 மாணவர்கள் தோற்ற விருப்பதாக யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள 60 பரீட்சை நிலையங்களில் இந்த பரீட்சை நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கென நேற்றுமாலை நடத்தப்பட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## 'நிக்கோரெட்' கப்பலிலிருந்து 350 தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டன

### 200 பரல்களில் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம் செவ்.

இந்திய உணவுக்கப்பலான 'நிக்கோரெட்' லிருந்து நேற்று சுமார் 350 தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டுள்ளன.

சுமார் 200 பரல்கள் மண்ணெண்ணையும் இறக்கப்பட்ட பொருள்களில் அடங்குகின்றன.

இம்முறையே ஆகக் கூடுதலான மண்ணெண்ணை வந்துள்ளதாக உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு.பற்குணம் தெரிவித்தார்.

இரண்டு நாட்களில் இக்கப்பலின் பொருள்களை இறக்கும் வேலை முடிவுறும் என்றும், மேற்படி கப்பல் நாளை புதன் கிழமை சென்னைதிரும்பலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பரீட்சை தவிர்ப்புச் சலுகை

யாழ்ப்பாணம், செவ்

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து விண்ணப்பித்து, ஆனால் தோற்ற முடியாத நிலையிலுள்ள பாடசாலை - தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இவ்வருடம் பரீட்சை தவிர்ப்புச் சலுகை வழங்கப்படவுள்ளது. இக்காரணங்களுக்கான விண்ணப்ப இறுதித்திகதி எதிர்வரும் 25ம் திகதியாகும்.

விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள வடமராட்சியிலுள்ள பாடசாலைகளில் கற்பவரா

(5ம் பக்கம் பார்க்க)

## அலெஸ் கமிஷன் யாழ். நகரில் விசாரணை

[அலுவலக நிருபர்)

யாழ் போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீதான விசாரணை நடத்தும் அலெஸ் விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளிக்க விரும்பும்' யாழ் வைத்திய சாலை தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும், அவர்களது உறவினர்களும் நாளை புதன் கிழமை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி அந்தோனி கிறீஸ்தோபர் அலெஸ் முன்னிலையில் 23ம் திகதி, வியாழக்கிழமையும், 24ம் திகதி வெள்ளிக்கிழமையும் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (வா)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தொல்புரம் விவசாயக் கந்தோருக்கு அருகே 15 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: சி காசி, காசிவாசம்', சுழிபுரம். [சி-9894)

குளப்பிட்டிச் சந்தி ஆனைக்கோட்டை வீதியில் நல்ல சூழலுடன் கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; திருமதி ஜெகதீஸ்வரன், குளப்பிட்டி சந்தி, கொக்குவில். சி-9815

நல்லஇன 1 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் நாய். Fanta புருக்கள் 3 சோடி குஞ்சுகளுடன் 2 துவிச்சக்கர வண்டிகள் (Grand Champion, Eastern) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: "ஞானோதயம்" குளுக்கண்டிலேன், கட்டப்பிராய் (கோப்பாய் மருத்துவமனைக்குப் பக்கமாக செல்லும் ஒழுங்கை) சி-9916

சிங்கர் Zig Zag, Usha Zig Zag தையல் மெசின்கள், கசற் றேடியோக்கள், Show case, பெல்ஜியம் கண்ணாடி மேசைகள், Office மேசைகள், ஹோல் செற், Meet Safe, அல்மாரி, கட்டில் மற்றும் பலவித வீட்டுப்பாவனைப் பொருள்கள் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்) சி-9943

### தேவை

பிடவைக்கடைக்குத் தேவையான நல்ல நிலையில் இருக்கும் அலுமாரி (Fittings) உடனடியாகத்தேவை. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ், 119/3 மைலண்ட்ஸ் கட்டிடம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9946

### மணப்பந்தல்

வெளிநாட்டில் நிரந்தரமாகத் தொழில் புரியும் மணமகன்களை திருமணம் செய்ய விரும்பும் மணப்பெண்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும். 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (ஏ9900)

### சேவை

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கிவந்த யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் தற்போது 168, கோவில் வீதியில் இயங்கிக்கொண்டிருக்கிறது [கைலாய பிள்ளையார் கோவில் சந்தியிலிருந்து கோவில் வீதித் தெற்குப்பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது]. [சி-9922]

## நன்றி நவிலல்

வட்டுக்கோட்டை முன்னுள் பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் டாக்டர் கந்தையா கிருஷ்ணர் அவர்களின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 19-7-87 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00மணிக்கு நடைபெற்றது. இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், சகோதரர். (சி-9945)

## கரவெட்டி அகதிகளுக்கு உதவி

[கொழும்புத்துறை நிருபர்]

கரவெட்டிப் பங்குத்தந்தை வண. பிதா. சகாயநாயகம் அடிகளார் தென்மராட்சியில் தங்கியுள்ள கரவெட்டிப்பகுதி அகதிகளின் நலன்களைக் கவனித்துவருகின்றார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

நல்லதம்பி சிவயோகம் (பூநகரி)

தோற்றம்: 12-08-1927

மறைவு; 21-06-1987

அன்பான அம்மா நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் எமது உள்ளத்தில் உமது சமாதி என்றும் வீற்றிருக்கும். 21 07-1987 செவ்வாய் அன்றுநடைபெறும் அந்தியேட்டிக்கிரியையில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர். [சி-9914]

செ. ந. விஸ்வலிங்கம்
எல். எல். பி.
சட்டத்தரணி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட மன்றில்

இல. 41, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்து விடயத்தில்,

மரணமானவர்.

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல. 4030

கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் கைம்பெண் இரத்தினபூபதி, இல 41, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்,

மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஆடி மாதம் 31ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னதாக இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளை ஆக்கப்படலாகாது என்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1987ம் ஆண்டு ஆடி மாதம் 1ம் திகதியன்று.

மன்றின் கட்டளைப்படி.

கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு:
செ. ந. விஸ்வலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
[சி-9920]

## வறுமை நிவாரண உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், செவ் வண்ணார்பண்ணை தென் கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவிற்குரிய இரண்டாம் கட்ட வறுமை நிவாரண உணவு முத்திரை விநியோகமும், பாதிக்கப்பட்டவர்கட்கான உத்தரவு பத்திர விநியோகமும் முடிவடைந்து விட்டதாகத் தெரியவருகின்றது.

இன்றைய சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து இருப்போரும், இதுவரை உணவு முத்திரையோ உத்தரவு பத்திரமோ பெறுகவர்களும் வரும் 22ம் திகதி புதன் கிழமைக்கு முன்பு ஆனைப்பந்தி சந்தியிலுள்ள தனது காரியாலயத்தில் நேரில் தொடர்பு கொண்டு உடனடியாக அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், தவறின் அவை யாழ். உதவி அரசாங்க அதிபர் காரியாலத்திற்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் வண்ணார்பண்ணை தென் கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. வி. கே. தளையசிங்கம் தெரிவித்துள்ளார்.


## சீட்டிழுப்பு

அளவெட்டி புனித வின்சன்ட் டீ போல் சபையினரால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-ம் பரிசு | இல. | 151 | 11-ம் பரிசு | இல. | 1057 |
| 2-ம் பரிசு | இல. | 942 | 12-ம் பரிசு | இல. | 175 |
| 3-ம் பரிசு | இல | 1837 | 13-ம் பரிசு | இல. | 518 |
| 4-ம் பரிசு | இல. | 2014 | 14-ம் பரிசு | இல. | 684 |
| 5-ம் பரிசு | இல. | 1891 | 15-ம் பரிசு | இல. | 603 |
| 6-ம் பரிசு | இல. | 673 | 16-ம் பரிசு | இல. | 460 |
| 7-ம் பரிசு | இல. | 1914 | 17-ம் பரிசு | இல. | 667 |
| 8-ம் பரிசு | இல. | 19 | 18-ம் பரிசு | இல. | 607 |
| 9-ம் பரிசு | இல. | 1132 | 19-ம் பரிசு | இல. | 1522 |
| 10-ம் பரிசு | இல. | 903 | 20-ம் பரிசு | இல. | 492 |

விபரங்களுக்கு அளவெட்டி புனித சூசையப்பர் பங்கு சடையினருடன் தொடர்புகொள்ளவும். [சி-9917]

வழமையான

நேரடி பஸ்சேவை

வவனியா ↓

↓ ↑ யாழ்ப்பாணம்

வவனியா ↑

தினசரி நடைபெறுகிறது உங்கள் பயணம் சுலபமாக எம்மிடம் பதிவு செய்யுங்கள்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ

131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் [ஏ 1941]

வாடிக்கையாளர்கள் நன்மைகருதி இல்லங்களுக்கு

நேரடி விநியோகம்

எல். பி. காஸ்

L. P. GAS

குறைந்த விலையில் பெறுவதற்கு

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

131. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஏ 1942]

வேலையாட்கள் தேவை

மன்னார் நீர் விநியோகத் திட்டத்தின் முருங்கன் வேலைத்தளத்திற்கு

மேசன், தச்சு வேலை

ஒப்பந்தஅடிப்படையில் செய்வதற்கு ஆட்கள்தேவை.

அரசாங்க அதிபரின் அங்கீகாரம் பெற்ற இவ்வருடத்தைய Rate கொடுக்கப்படும்.

புதன்கிழமை வரை தொடர்புகொள்ளவும்:

பொறியியலாளர்,

C/o Sara Sethu Servics,
207, K. K. S. ROAD, CHUNNAKAM,
அல்லது
Samuel Sons & Co Ltd,
Mannar Water Suppley Project,
MANNAR.

[சி-9948]


## தகவல் தாருங்கள்

எனது தமையனார் வகிரி "ராஜ் கிறீம் ஹவுஸ்" உரிமையாளர் மா. வேலாயுதம் எங்களுடன் தங்கி இருந்துவிட்டுத் தனது குடும்பத்தாரைத் தேடி 14-7-87 முல்லைத் தீவுக்குப் புறப்பட்டார். இதுவரை இவரைப்பற்றிய தகவலெதுவும் கிடைக்கவில்லை. இவரைப் பற்றிய தகவல்கள் யாரும் அறிந்தால் நாங்கள் தற்பொழுது இடம் பெயர்ந்திருக்கும் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

— சோமசுந்தரம் நவரத்தினம்,
பவள வாசா
கண்டி றோட்
சாவகச்சேரி.

★

புலோலி ப. நோ. கூ. சங்கத்தில் ஸ்டோர்க் கீப்பராகக் கடமை புரிந்த செல்வராசாவின் குடும்பம் அவரது சகோதரி தையல்நாயகி குடும்பம் பற்றிய தகவல்களை அறிய விரும்புகின்றோம். மேற்குறித்தவர்களின் தாயும், இளைய சகோதரியும் எம்முடன் தற்பொழுதுதங்கியிருக்கிறார்கள். தகவல் அறிந்தோர் பின்வரும் முகவரிக்குத் தகவல் தாருங்கள்.

ஆ. க. மதியாபரணம்,
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

## காரைநகர் மக்கள் கவலை

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகரில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் பெரும் சிரமப்படுவதாக இப்பகுதியிலுள்ள மின்பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன்காரைநகரிலுள்ள பிரதான வீதியான, கிழக்கு, மேற்கு வீதிகள் பலவருடகாலமாக திருத்தப்படாமலிருப்பதால் குண்டும் குழியுமாக இவ்வீதிகள் காட்சிதருகின்றன.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பலதடவை தெரிவித்திருந்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ)

## குத்திக் கொலை

[வவனியா நிருபர்]

வவனியா சிங்களப் பிரிவு மகா கச்சக்கொடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை முகாமையாளரான புஞ்சி கேலகே சந்திராவதி [30-வயது] இனந்தெரியாதவர்களினால் கடைக்குள் வைத்துப் பகல் நேரத்தில் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15-ம் திகதி புதன் கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

அவரது உடலில் பல இடங்களில் கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரான்ஸ் -- ஈரான் நெருக்கடி முற்றுகிறது---

# இரு நாட்டுத்தூதரக அதிகாரிகளும் நீதிமன்றத்தில் ஆஜராக மறுப்பு

## முடிவில் மாற்றம் இல்லை என்கிறார் பிரான்ஸ் அமைச்சர்

உலகச் செய்திகள்

பாரிஸ்,ஜுலை 20

**பிரான்ஸில் கடந்த வருடம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக பிரான்ஸில் உள்ள ஈரானிய தூதரக அதிகாரிகள் பாரிஸில் உள்ள மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜராகியே தீரவேண்டும்.**

இவ்வாறு பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் பிரான்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள பாரிஸில் உள்ள ஈரானியத் தூதரகத்தினுள் இருக்கும் அதிகாரிகள் மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜராக வேண்டும் என்ற பிரான்ஸ்அரசின்முடிவில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது.

பிரான்ஸின் இந்நடவடிக்கையால் ஈரானில் தூதரகத்தின் உள்ளே ஈரானிய புரட்சிப் படைகளாலும் பொலிஸாராலும் காவல் வைக்கப்பட்டுள்ள பிரான்ஸ் தூதரக அதிகாரிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அது குறித்து பிரான்ஸின் நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை உளவுக் குற்றச்சாட்டின் பேரில் இஸ்லாமிய நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஈரானிய அரசு விடுத்த உத்தரவை பிரான்ஸ் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் தூதரக அதிகாரிகளும் மறுத்து வருகின்றனர்.

இதை அடுத்து இருநாடுகளுக்குமிடையேயான உறவில் மேலும் நெருக்கடி தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் 15 பிரான்ஸ் அதிகாரிகளைப் பணயம் வைத்திருக்கும் ஈரானியர்கள் தூதரகத்தின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தியுள்ளனர்.

## 'இந்திராகாந்தி' இழுவைப்படகு

சென்னை, ஜுலை 20

தூத்துக்குடியில்புதிதாக ஓடவிடப்பட்ட அளவான இழுவைப் படகுக்கு "இந்திராகாந்தி" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5கோடி ரூபா செலவில் முற்றிலும் உள்ளூர் உற்பத்தி பொருள்களைக் கொண்டு உள்ளூரிலேயே வடிவமைக்கப்பட்ட 30 தொன் எடையுள்ள இந்த இழுவைப் படகில் முதல் தடவை பல நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

## 2600 திரை அரங்குகள்: 80 கோடி வருமானம்

(சென்னை)

தமிழகத்தில் பெருகிவரும் திரை அரங்குகளுக்குக் கட்டுப்பாடு விதித்து 25 ஆயிரம் மக்களுக்கு ஒரு திரை அரங்கு என்ற விகிதத்தில் இருக்க வழிசெய்யுமாறு தமிழ்நாடு திரை அரங்கு உரிமையாளர் சங்கம் தமிழக அரசைக் கேட்டுள்ளது

தமிழகத்தில் தற்போது 2 600 திரை அரங்குகள் உள்ளன இவற்றின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 80கோடி ரூபா தமிழக அரசுக்கு வருமானமாகக் கிடைக்கின்றது என்று மேற்படி சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

கட்சிவிரோத செயல் குற்றச்சாட்டு:-----

# வி. பி. சிங் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டார்

புதுடில்லி; ஜுலை 20

இந்திய முன்னாள் மத்திய நிதி, பாதுகாப்பு அமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளார்.

கட்சிவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றகுற்றச்சாட்டின் பேரிலேயேதிரு. வி. பி. சிங் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியக் கமிட்டி பொதுச் செயலாளர் திரு ஜி. கே. மூப்பனார் புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

பிரதமர் திரு ராஜீவ்காந்தியின் அமைச்சரவையில் முன்பு நிதி அமைச்சராக இருந்த திரு. வி. பி. சிங் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும்உள்ள கறுப்பு பண விவகாரம்தொடர்பான சர்ச்சை காரணமாக பாதுகாப்பு அமைச்சராகபதவி மாற்ற செய்யப்பட்டார்.

பின்னர் சுவிடன், மேற்குஜெர்மன் ஆயுத பேர ஊழல் விவகாரம் வெளிவந்ததையடுத்து திரு. சிங் தாமே தமது பதவியிலிருந்து ராஜினாமா செய்து கொண்டார்.

அஜிதாப்பச்சனின்-----------------

## சுவிஸ் சொத்து பற்றி விசாரிக்குமாறே கேட்டேன்

– வி. பி. சிங்

"இந்திராகாங்கிரஸ்கட்சிக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் நான் ஈடுபடவில்லை" என்று இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு வி. பி. சிங் நிருபர்களிடம் தெரிவித்தார்

கட்சியிலிருந்து என்னைவெளியேற்றியமுடிவு பற்றி அறிவித்ததும் வியப்புற்றேன் என்றும் திரு. சிங் வருத்தத்துடன் தெரிவித்தார்.

முன்னாள்இந்திரா காங்கிரஸ் எம்.பி யும் நடிகரும் திரு. ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பருமான திரு. அமிதாப்பச்சனின் சகோதரரான அஜிதாப்பச்சனுக்கு சுவிட்சர்லாந்தில் உள்ள சொத்துக்கள் பற்றிய விசாரணை நடத்துமாறு பிரதமருக்கு கடிதம் எழுதியதைவிட நான் எதுவித கட்சி விரோத நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் திரு. சிங் நிருபர்களிடம் கூறினார்.

இரத்தக்கறையை----

# இரத்தக்கறையால் அகற்றிவிடமுடியாது

## இந்திய ஜனாதிபதி கூறுகிறார்

சண்டிகார், ஜுலை 20

இரத்தக்கறையை இரத்தக்கறை கொண்டு அகற்றிவிட முடியாது. பஞ்சாப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்குஇதுவிஷயத்தில்வேரூன்றிப் போன விஷயத்தை கண்டறியவேண்டியது மிகமிக அவசியம்

இவ்வாறு இந்திய ஜனாதிபதி சண்டிகாரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது கூறினார்

ஜனாதிபதிபிரதமர் உறவுமுற்றிலும் இரகசியமானது இருவருக்குமிடையே உள்ளதகவல் பரிவர்த்தனையில் இடைவெளி இருக்கக்கூடாது என்றும் திரு. ஜானி ஸெயில்சிங் கூறினார்.

## தெ. ஆபிரிக்காவில் தமிழ்-ஆங்கில அகராதி

சென்னை, ஜுலை 20

தென் ஆபிரிக்காவில் அங்குள்ள தமிழ் வேத சங்கம் தமிழ் ஆங்கில அகராதி ஒன்றை தயாரித்து வெளியிட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் ஆங்கில அகராதியான இதில் தென் ஆபிரிக்காவின் புழக்கத்திலிருக்கும் சில வார்த்தைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## கள்ளநோட்டை கண்டுபிடிக்கும் நாய்

மாஸ்கோ, ஜுலை 28

பணத்துக்கு வாசனை உண்டா? இல்லை என்பதே இதுரை நிலவிவரும் கருத்து ஆனால்மாஸ்கோவில் உள்ள 3 வயது நிரம்பிய நாய் ஒன்று பொய்யாக்கி உள்ளது இதற்கு அபாரமான மோப்ப சக்தி இருக்கிறது

வாசனையை வைத்தே நல்ல நோட்டில் இருந்து கள்ள நோட்டை அது கண்டுபிடிக்கிறது. அது மட்டுமல்லாமல் நாணயங்கள் மத்தியில் இருந்து தங்க மோதிரத்தையும் அது முகர்ந்து பார்த்தே கண்டுபிடித்து விடுகிறது.

அரிய உலோகங்கள் மற்றும் காகித நாணயங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பம்நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. எனவே, இந்த நாய்க்கு ரூபிளில் இருந்து டாலர், பிராங்க், மார்க், பவுண்ஸ் ஆகியவற்றை இனம் பிரித்துக் கண்டுபிடிக்க கற்றுத் தர முடியும் என அதன் உரிமையாளர் அலெக்சாந்தர் தரய் கோவ்ஸ்கி நம்பிக்கை தெரிவிக்கிறார்.

## ரஷ்யாவில் 2, 41, 000 விபத்துக்கள்

மாஸ்கோ ஜுலை 20

சோவியத் நாட்டில் 1986ல் சாலைப் போக்குவரத்தில் மொத்தம் 2,41,000 விபத்துக்கள் ஏற்பட்டன; இவற்றுல் சுமார் 39 000 பேர் மரணம் அடைந்தனர் சுமார் 2600 0 பேர் காயமுற்றனர். சாலைப் போக்குவரத்து விதிகள் நாலு கோடி தடவைகள் மீறப்பட்டன குடித்துவிட்டுக் காரோட்டியதற்காக 15 லட்சத்துக்கு அதிகமான டிரைவர்கள் தண்டிக்கப்பட்டனர். விபத்துக்குள்ளானோரில் 13 சதவிகிதத்தினர் குழந்தைகள்.

# இந்தியாவிலும் 8,000 டாக்டர்கள் வேலைநிறுத்தம்!

## தனியார் மருத்துவ மனைகளில் அரசு செலவில் சிகிச்சை

புதுடில்லி, ஜுலை 20

அதிக சம்பளம் அலவன்ஸ் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து ஆயிரத்துக்கும் அதிகமான டாக்டர்கள் இந்தியா முழுவதும் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

கடந்த இரவுமுதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தம் செய்துவரும் டாக்டர்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்த மத்தியசுகாதார இணை அமைச்சர் செல்வி சரோஜ் கபாடேபுதியசம்பளத் திட்டம்ஒன்றை அறிவித்துள்ள போதிலும் அத்திட்டத்தை டாக்டர்களின் செயற்குழு நிராகரித்துவிட்டது.

இந்தவேலை நிறுத்தத்தினால் நோயாளிகளுக்கு மேலும்கஷ்டங்களை ஏற்படுத்தவேண்டாம் என்றும்கோரிக்கைவிடுத்துள்ள செல்வி கபாடே டாக்டர்களின் ஏனையகோரிக்கைகளைப் பற்றியும் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தனியார் மருத்துவமனைகளில்....

இதேவேளையில் டாக்டர்களின் வேலைநிறுத்தத்தினால் நோயாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கும்பொருட்டு அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெறும் நோயாளிகளை தனியார் டாக்டர்களிடமும் தனியார்மருத்துவ மனைகளிலும் சிகிச்சைபெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்றும் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு ஏற்படும் செலவுகளை அரசாங்கம் பெறுப்பேற்கும் என்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 26ம் திகதி மாலை செட்டித் தெருவிலுள்ள வீடொன்றில் நடைபெறவுள்ளது.

### மணிவாக்கு

விஷயங்களை சேகரிப்பது அறிவாகும்; அவைகளைப் பயன்படுத்துவது ஞானம், அவைகளைத் தேர்ந்தெடுப்பதானது கல்வி; ஆக, அறிவானது அதிகாரமல்ல, செல்வம்.

—ஹென்றிபோர்ட்

## நமது நோக்கு

# பத்திரிகைச் செய்திகள் உண்மையானால்...!

இனப் பிரச்னைக்குத் தீர்வு! பத்திரிகைகள் எல்லாமே இப்பொழுது புதிய பல விடயங்கள் பற்றி பல்லவி பாட ஆரம்பித்துள்ளன.

இனப்பிரச்னைக்கு திருப்திகரமான தீர்வு என்பது என்றுமே சாத்தியமாக முடியாத விடயம். ஆனால் பெரும்பாலானவர்கள் திருப்தி கொள்ளும் அம்சங்கள் ஒரு தீர்வில் இருக்குமானால் அது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்றாக அமைந்துவிடக்கூடும். மற்றப்படி பிரச்னையில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரையுமே திருப்தி செய்யும் விதத்தில் தீர்வொன்றை உருவாக்குவது மனித சக்திக்கு அப்பாற்பட்டவிடயம்.

இப்படி எழுதும்போது ஏதோ அரசியல் தீர்வுஒன்று உருவாகி விட்டதாகவும், அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதாகவும் நாம் வலியுறுத்துவதாக வாசகர்கள் கருதிவிடலாகாது.

அரசியல் தீர்வு ஒன்றுக்கான சில யோசனைகள்-புதியவை - முன்வைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகை செய்திகளின்படி நம்பக்கூடியதாகவிருக்கின்றது. இந்த யோசனைகளை யார் முன்வைத்தது, இந்தியாவா, இலங்கையா என்பதுகூட இன்னும் பகிரங்கமாகவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு சில நெருக்குதல்களுக்கு உட்படுத்தியிருக்கிறது என்பதும், அந்த நெருக்குதல் மூலம் ஒரு அரசியல் தீர்வுக்கு வரவேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கின்றது என்பதும் மட்டும் தெளிவு. மேலும் இலங்கை அரசினை நெருக்குதல்களுக்குள்ளாக்கிய அதே வேளையில் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்தக்கூடிய சில அம்சங்களையும் இந்திய அரசு முன்வைத்திருக்கும் என்பதையும் மனம்கொள்ள வேண்டும். அந்தவகையில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் பெரிதாகப் பிரசாரம்செய்துவரும் 'தமிழ்ப் பயங்கரவாதம்' தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ள தகவல்கள் அமையலாம். அதாவது தமிழர் நல உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்போது தமிழ்த் தீவிரவாத இயக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா உதவி புரிவதென்பதாகும்.

எதுவானாலும் தமிழர் பிரதேசங்களில் இராணுவ உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டதாலும், தமிழர் குடியிருப்புக்கள்மீது ஆயுதப் படைகள் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாலுமே தமிழ்ப் போராளிகள் தீவிரமடைந்தனர். தமிழர் பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியாக எல்லைப் புறங்களில் ராணுவத்தினருடன் மோதல்களிலும் ஈடுபட்டனர். எனவே தீர்வு ஒன்று உருவாகும் படசத்தில் இப்பிரதேசங்களின் பாதுகாப்புக்குத் தேவையான ஏற்பாடுகள் மிகுந்த கவனமாகவும் உறுதியுடனும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகவிருக்கும். திட்டமிட்ட குடியேற்றங்கள் முற்றாகவே நடைபெறாதவகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் யோசனைகளின் மீது பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா? அல்லது அந்த யோசனைகள் அப்படியே செயல்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? என்பது ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

தீர்வொன்று ஏற்பட வேண்டும் என்பதில் இந்தியா தீவிரமாக இருக்கின்றது என்பது வெளிப்படை. ஆனால் இறுதி முடிவு ஏற்படடபின் மக்கள் கருத்துக் கணிப்பொன்றுக்கு விடப்படும் என்றசெய்தியும்வெளியாகியுள்ளது. அது எப்படியிருக்கும் என்று இப்போது விமர்சிக்கத் தேவையில்லை.

யாழ். குடாநாட்டின் மீது இலங்கை அரசு அதிதீவிர இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டதின் பலன்இது. ஆரம்பத்திலிருந்தே இலங்கை அதிகாரிகள் நிதானமாக இனப்பிரச்னையை அணுகியிருந்தால் தமிழ்மக்களின் நல்லெண்ணத்தை இழந்திருக்கத் தேவையில்லை. இந்தியா உணவுப் பொருள்களை விமானம் மூலம் கொண்டுவந்து போடவேண்டியஅவசியமும் ஏற்பட்டிருக்காது. விருப்பமில்லாமலே இந்திய உணவுக் கப்பல்கள் இங்கு வருவதற்கு அனுமதியளிக்க வேண்டியும் இருந்திருக்காது.

எப்படிப்பார்த்தாலும் இந்நாட்டின் அரசியல் போக்குகளால் தமிழ் இனத்தவர்களுக்கு ஏற்பட்டுவிட்ட இன்னல்களின் பிரதிபலிப்பே இன்றைய நிலையாகும். எவ்வாறோ ஓர் தீர்வினை, அமைதியை தமிழ் இனத்தவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு தன்னை உட்படுத்திக் கொள்ள இந்தியாவுக்கு இது வாய்ப்பளித்திருக்கிறன்து இந்நிலையிலிருந்து அது பின்வாங்கும் என்றும் எதிர்பார்ப்பது சாத்தியமில்லை

எந்தத் தீர்வானாலும் தமிழ் மக்கள் மீது வலிந்து திணிப்பதாக அமைந்துவிடலாகாது. அது, தமிழர்களின் சுயாதிபத்திய உரிமைகளை உறுதி செய்வதாக அமையவேண்டுமேயன்றி பலவீனப்படுத்துவதாக அமையலாகாது.

★ ஒரே இலங்கை ★ சர்வஜனவாக்கெடுப்பு
★ பாராளுமன்ற அங்கீகாரம்

# இனப்பிரச்னைத் தீர்வுக்கு ஜே.ஆரின் நிபந்தனைகள்

(கொழும்பு)

"சர்வஜன வாக்கெடுப்பு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பொரும்பான்மை அங்கீகாரம். இவற்றுக்குப் பின்னரே இனப்பிரச்னைக்கான எந்தஒரு தீர்வும் நடைமுறைப் படுத்தப்படும்."

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெவர்த்தன மொறட்டுவவில் நடைபெற்ற உள்ளூராட்சிகளின் தேர்தல்கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

தீர்வு எதுவாக இருப்பினும் நாட்டின் ஆதிக்க உரிமையும் அரசியல் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டு ஒன்றிணைந்த ஒரே இலங்கை என்ற கட்டமைப்புக்குள்ளேயே அது மேற்கொள்ளப்படும் என்றும் ஜனதிபதி கூறினர்.

# முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள 'ஹஜ்' யாத்திரை

[முஸ்லிம்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள 'ஹஜ் யாத்திரை'யின் தாற்பரியம் என்ன? விளக்கம் தருகின்றார் கட்டுரையாளர்].

என ஏங்கி வாழும் இக்கால கட்டத்தில் என்றுமில்லாதவாறு யாழ். நகரிலிருந்து இம்முறை சுமார் 23 பேர் புனித ஹஜ் யாத்திரை ஆரம்பிக்க யாழ் நகரிலிருந்து புறப்பட்டது; எம் இனத்துக்கு, தமிழ் பேசும் இனத்துக்கு அல்லல் படும் இந்நாட்டு மக்களுக்கு சமத்துவத்தை, சமாதானத்தை, சுபிட்சத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். கஃபா ஆலயத்தின் திரைச் சீலையைப் பிடித்தபடி இவர்கள் வேண்டும் "துஆ" என்னும் வேண்டுதல் நிச்சயமாக நாட்டு மக்களுக்காக இருக்கும், நாட்டுக்காக இருக்கும். உயிரின் விலையை அற்பமாகக் கண்ட இவர்கள், குலம் கோத்திரத்தால், பொருள்பண்டங்களால் நிச்சயமாக நிம்மதி கிடையாது, கிடைக்கப்போவதுமில்லை, இறைவனிடம் கையேந்துவதில் ,அவன் உதவியில்தான் நிம்மதி உண்டு என்று கண்ணால்கண்டவர்கள்.

களாக இருக்கவேண்டும். இவ்வாடை தையல் இல்லாத முண்டுத் துணிகளாகும் இவ்வாடைக்கு மேல் உயர்தர எந்த ஆடையையும் அணியக்கூடாது. நறுமணம் பூசிக்கொள்ளக்கூடாது. நகம் கூட வெட்டக்கூடாது. குடும்பமாயிருந்தால் உடலுறவில் ஈடுபடக்கூடாது.

பகலில் சகிக்க முடியாத கடும் வெயில், இரவில் கடுங்குளிர். மாடமாளிகையில் கூட கோபுரங்களில் பட்டு மெத்தையில் படுத்திருந்தவர்கூட அங்கு கட்டாந்தரையில். மணல்மேட்டில், கூடாரங்களில் தவள வேண்டிய சூழல். பலருக்கு சீதோஷ்ணசூழல் மாற்றத்தால் உடல் நிலை பாதிப்படையும் நிலைமை இறப்புக்களும் ஏற்படும். அக்கடமையின் போது அங்கு இறப்பு ஏற்படுவதை பெரும் பாக்கியமாகக் கருதுபவர்கள் முஸ்லிம் மக்கள்.

**அகுமது கரீம் அக்பர் ஜின்னா**

புனித ஹஜ் கடமையைப் பற்றி முஸ்லிம்கள் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். கேளிக்கைகளுக்காக, கூத்துக்களுக்காக, இசைக் கச்சேரிகளுக்காக, வியாபாரத்துக்காக இஸ்லாம் தரும் ஹஜ் கடமைஏற்படுத்தப்படவில்லை. உலகம் தோன்றிய காலமுதல் இந்த ஹஜ் கடமை பலஇமைக்களால், பல மதத்தவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது சரித்திர சான்றாகும். பெருமானார் முஹமத் (ஸல்) அவர்கள் பிறப்புக்கு முன்னர் வைத்த "செமித்தியர்" என்னும் இன மக்களால் இக் கடமை நிறைவேற்றப்பட்டது. கேளிக்கைகளுக்கும், இசைக்கும் ஆபாச நடனங்களுக்கும் இவர்கள் மிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். பெருமானாரின் பிறப்புக்குப்பின், அவர்கள் இறுதித் தீர்க்க தரிசியாக இறைவனால் ஆக்கப்பட்ட பின்னர் ஹிஜ்ரி 9ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு ஹஜ் கடமை கட்டாயக் கடமையாகஇறைவனால் விதிக்கப்பட்டது. ஹிஜ்ரி 10ம் வருடம் பெருமானாரின் முதலும் கடைசியுமான ஹஜ் கடமை நிறைவேற்றப்பட்டது. பெருமானாருக்கு இறைவனால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் செய்யப்பட்ட ஹஜ் கடமை இன்றும் அணுவளவும் பிசகாத மாதிரி நடைமுறைபடுத்தப் படுகின்றது.

இக் கடமையை நிறைவு செய்ய லட்சோப லட்சம் மக்கள் உலகின் எட்டுத் திக்கிலுமிருந்து மக்கா மா நகர் வருகின்றார்கள் சகலரும் "இஹ்ராம" என்ற ஆடையை மட்டும்தான் அணிநதவர்

## பாவமன்னிப்பு

ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு முன்னர் முஸ்லிம்களுக்கு சில விதிமுறைகள் உண்டு. முதலில் பாவமன்னிப்பு தேடவேண்டும். சொல் செயல்,எண்ணம்.கேள்வி பார்வையால் எவருக்காகிலும் ஏதவது கெடுதல் செய்திருந்தால் அன்னவரிடம் சென்று பிழை பொறுக்கும்படி கேட்கவேண்டும். கடன்கள் இருந்தால் அதை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லுபவர்கள் மக்கா மாநகரின் குறிப்பிட்ட எல்லைக்குள் வீண் சண்டை சச்சரவுகள் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆயுதங்களைப் பாவிக்கக்கூடாது. கேளிக்கைகளிலும் வீண் பொழுது போக்கிலும் ஈடுபடக்கூடாது.

சமத்துவம், சகோதரத்துவம், மனிதப் பண்பாடு ஆகியவைகள் பேணப்படும் டாக்டர் லேனர் நடுநிலைமையோடு இஸ்லாத்தை ஆராய்ந்தபோது 'பணியாளனையும், எஜமானனை பிரித்தறிய முடியாத காட்கியும் சமத்துவமும் சகோதரத்துவமும் போற்றப்படும் காட்சியும் ஹஜ்ஜிலே அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பாலைவனத்தில் வற்றாத நீரூற்று

வரண்ட பாலவனத்கில் கிண்டகிண்ட பெற்றோல்பீறிட்டுப்பாயும். அந்நிலத்தில் "ஜம்-ஜம்" என்னும் வற்றாத நீரூற்று ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறை சக்தியால் உண்

(5ம் பக்கம் பார்க்க)

பிரச்னைகள் மலிந்த, பொருளாதாரம் நலிந்த எந்த நேரத்தில் என்ன நடக்குமோ

## மக்கள் கருத்து

### ஏழைகளின் துயர்துடைத்து சாவதே மேல்

இந்தியாவுக்கு அலெக்ஸான்டர் வந்தபொழுது ஒரு துறவியைப்பார்த்து மிக அதிசயித்து, அவரை தனது நாட்டுக்கு அழைத்துச்செல்லவிரும்பினர். துறவி அரசனுடன் செல்ல மறுத்துவிட்டார். அலெக்ஸாண்டர் அவரைக் கொன்றுவிடுவதாக கூறினர். துறவி அதற்கும் அஞ்சவில்லை. "உமது வாள் எனது உடலைக் கொல்லுமே தவிர எனது ஆத்மாவை ஒன்றும் செய்ய முடியாது" என்றார் அத்துறவி.

சுவாமி விவேகானந்தர் அந்த வீரபரம்பரையைச் சேர்ந்த துறவியாவர். சுவாமி விவேகானந்தரின் வாழ்வு நமக்கு ஒரு பெரியபாடம்.

நமது குடாநாட்டில் வாழும் மக்களில் அநேகர் தமது சுயநலத்தை தீர்ப்பதற்காக எதையும் செய்வர். இன்று பலர் நாடுவிட்டு, இந்தியா, கனடா ஜெர்மனிக்கு ஏன் போகிறார்கள? தங்கள் உயிர்மேல் உள்ள ஆசையினல்தான் பலருடைய நோக்கம் தத்தம் குடும்பம் வாழவேண்டும் என்பதே. ஏழைகள் பலர் தம் ஊரையே விட்டுச்செல்ல முடியாதவர்கள் பலவாறு துன்பப்படுகிறார்கள். இவர்கள் துயர் துடைக்க எவருக்கும் விருப்பமில்லை கடவுளும் கலியுகத்தில் ஏழைகளையும் நடுத்தர வகுப்பினர் யாவரையும் தான் துன்பப் படுத்துகிறார்.

துறவு பூண்ட யான் ஏழைகளின் துயர்துடைத்து இவர்களுக்கு சேவைசெய்து இறப்பதுதான் மேல் என்று கருதுகிறேம்.

எல்லாம் சிவன் செயல்

**சுவாமி சித்ருபானந்தா**

## 7 இளைஞர்கள் கைது: உடல் உறுப்புகள் கடும்சோதனை

யாழ்ப்பாணம், செவ்வல்லை - மண்டானுக்குச் செல்லும் சந்தியில் நேற்று இராணுவத்தினர் அவ்வழியால் செல்லும் சகலவாகனங்களையும்தடுத்துநிறுத்தி கடுமையான சோதனைக்குட்படுத்தினர்

இந்த சோதனையின்போது நேற்றுக்காலை ஏழு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்

இத்தகவலை பஸ்ஸில்வந்த பிரயாணிகளிடமிருந்து அறிய முடிந்தது.

சோதனையின்போது இவ் இளைஞர்களின் முழங்கை, முழங்கால், நெஞ்சு விரல்கள் போன்ற உடலுறுப்புக்களை மிகக்கூர்மையாக இராணுவம் சோதித்ததென்றும் கூறப்பட்டது. [கு]

## இரு வெவ்வேறு தாக்குதலில் பத்து சிப்பாய்கள் பலி - புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ். செட்டிக்குளம், கட்டையடம்பன் பகுதிகளில் நேற்று இடம் பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்றுக்காலை செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து மதவாச்சிக்கு 1 மினிபஸ், 1 ஜீப் வண்டி, மற்றும் ட்ரக் சகிதம் சென்று திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது செட்டிகுளத்துக்கு அருகில் வைத்து திடீர் தாக்குதல் நடாத்தப்பட்டதில் இராணுவ வாகனங்களுக்குப்பின்னல் நடந்து வந்த 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே, கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர், எமது தரப்பில் இருவர்சிறுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமாலை ஆலங்குளத்துக்கும், முருங்கனிற்குமிடையே கட்டையடம்பனுக்கு அருகில் வைத்து இராணுவம் சென்றஜீப்வண்டி மீது கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தப்பட்டதில். ஜீப்வண்டி முற்றாக சேதமடைந்துள்ளது மேலும் ஜீப்வண்டியின்பின்னல் நடந்து வந்த பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று மூதூர் இராணுவ முகாமுக்கருகில் ஒரு பெண்மணிக்கு புலிகள் தண்டனை வழங்கச்சென்ற சமயம் அங்கு அப்பெண்ணுடன் காணப்பட்ட ஓர் இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டதுடன் அப்பெண்ணுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செவ் வெடிவிபத்தின்போது நேற்று முன்தினம் மரணமடைந்த கென்னடி, சுரேஷ் ஆகியோருக்கும், கடந்த சனிக்கிழமை மாவிட்டபுரத்தில் மரணமடைந்த காங்கேசனுக்கும் (சின்னண்ணு) தமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [ரா]

## 25ம திகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமொன்றிலேயே கல்விப் பணிப்பாளர் இத்தகவலை வெளியிட்டார்.

கல்விப்பணிப்பாளர் ஜனுப் மன்சூர் அங்குமேலும் தெரிவித்ததாவது: தமிழ் மாணவர்கள் இப்படியான பரீட்சைகளில் அதிகளவு சித்திபெறுவது சிங்கள மாணவர்களுக்கு கவலை அளிப்பதாகவும் இதனால் பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் ஊழல்புரிவதாக கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் தன்னிடம் தெரிவித்ததாகக் கல்விப்பணிப்பாளர் தாம் புள்ளிவிபரங்களை ஆதாரம் காட்டி அக்குற்றச்சாட்டை மறுத்ததாகவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சாத்திகளுக்கு வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர்களினல் பரீட்சாத்திகளுக்கு வசதியான இடங்களில்வைத்து அனுமதிப் பத்திரம்வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சிப்பகுதி இராணுவ நடவடிக்கைகாரணமாக கொழும்பில்பரீட்சை எழுத அனுமதிபெற்ற பரீட்சாத்திகளுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சை நிலையங்களில் அனுமதி வழங்கப்படுவதாகவும் அப்பகுதியில்உள்ள ஏனைய பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சை நிலையங்களிலேயே பரீட்சை நடைபெறுமெனத் தெரியவருகிறது. [வா]

## பொடிபுத்தா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. தென்னக்கோன் பிரதிநிதியமைச்சர் பதவியிலிருந்து 1963ம் ஆண்டு ராஜினமாச் செய்தார். 1964ம் ஆண்டு இடைத் தேர்தலில் சுயேட்சை வேட்பளராகப் போட்டியிட்டார். 1964ம் ஆண்டு முதல் 1977ம் ஆண்டுவரையும் பாராளுமன்றில் சுயேச்சை உறுப்பினராகவிருந்தார் அத்துடன் 1964ம் ஆண்டு முதல் 1987ம் ஆண்டுவரை 23 வருடங்கள் சுயேட்சை அரசியல் வாதியாகவிருந்தார்.

'மக்கள் அபிவிருத்தி கவுன்ஸில்' என்ற அமைப்பை உருவாக்கி மத, அரசியல் சார்பற்ற சேவையை மேற்கொள்கொள்ளும் திட்டத்தை ஆரம்பித்தார்.

இந்த அமைப்பின் கூட்டம் கடந்த ஜூன் 28ந் திகதி கொழும்பில் இடம்பெற்றது. தொடர்ந்து ஜூலை 2ந் திகதி தனியார் பஸ்வண்டி ஒன்றில் அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்று உறவினர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இக்கடிதத்தில் தாயார், மனைவி. மற்றும் அவரது 4 பிள்ளைகளும் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ளனர்.

## பரீட்சை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவோ அல்லது அங்கு வசித்தவராகவோ அல்லது அங்கு வசித்தவண்ணம் அயற்பிரதேசப் பாடசாலைகளில் கற்பவராகவோவிருந்து இடம்பெயர்ந்தவராய் இருத்தல்வேண்டும்.

இவ்வாறு இடம்பெயர்ந்தமைக்கும் வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டமைக்கும் ஆதாரமாகப் பாடசாலைமாணவர் தமது அதிபராலும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராம சேவையாளர் உதவி அரசாங்க அதிபர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இவ்வுறுதியுரையுடன் பரீட்சார்த்திகள் தமது சுட்டிலக்கம், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி என்பவற்றேடு தாம் பரீட்சைக்குத் தோற்றவியலாமைக்கான காரணத்தையும் காட்டிப் பரீட்சை ஆணையாளருக்கு கல்விப்பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

## பூரி. பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் பங்குபற்றிய ஏனைய புலிகள் இயக்கப் பிரமுகர்களாவர்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் தற்போதைய உண்மை நிலை மற்றும் இன்றைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு ஆகியனவற்றை இந்திய அரசுக்குத் தெரியப்படுத்த திரு. பூரியுடனன இச்சந்திப்பு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியதென புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு.வே. பிரபாகரனை யாழ் வந்த இந்திய ராஜதந்திர பிரமுகர் ஒருவர் நேரில் சந்தித்துக் கொண்ட இந்த நிகழ்ச்சி மிகமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றெனவும் இதன்மூலம் மேற்படி இயக்கத்தை இந்தியா அங்கீகரித்ததாகவே கருதவேண்டியுள்ளதென்றும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

திரு. பூரிக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருக்குமிடையே ஆராயப்பட்ட விடயங்கள் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டுள்ளன. (ஒ)

## நஷ்டஈட்டு காசோலை கையளிப்பு

[கொழும்பு]

கொழும்பு புறக்கோட்டையில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் உறவினர்களுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் நேற்று வழங்கப்பட்டன.

புனர்வாழ்வு அமைச்சர்திரு. காமினி ஜயதிலக இந்தக் காசோலைகளை வழங்கினர். இதன்போது சமூகமளிக்காதவர்களுக்குத் தபால் மூலம் காசோலைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இனந்தெரியாதவர்களால் வைக்கப்பட்டு வெடிக்கப்பட்ட இவ்வெடிகுண்டு விபத்தில் சுமார் 130 பேர் கொல்லப்படும் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (சி)

## முஸ்லிம்களுக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்கப்பட்டது. இன்றும் அது லட்சோபலட்சம் மக்களுக்கு தண்ணீரை வாரிக் கொடுத்துக் கொண்டிருப்பது மாபெரும் மகத்துவமாகும்.

அங்குகூடும் லட்சோப லட்சம் மக்களில் அரசர்களுமிருப்பார்கள், ஜனதிபதிகளும் இருப்பார்கள், மந்திரி பிரதானிகளும் இருப்பார்கள், கோடீஸ்வரர்களும்இருப்பார்கள், சாதாரண ஏழைகளும் மலிந்திருப்பார்கள் எல்லோரும் ஒரே உடையில், உயர்வு தாழ்வு கிடையாது. எல்லோர் வாயிலும் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்" (அடிபணிந்தேன்-அல்லாஹ்வே உனக்கு அடி பணிந்தேன்) என்றுவிண்ணதிரஒலிப்பது. "நாங்கள் முஸ்லிம்கள், இறைவனின் அடிமைகள் ஒரே சமூகம் எங்களிடம் ஏற்றத்தாழ்வு கிடையாது என்பதைப் பிரகடனப்படுத்துகின்றது.


## கடைசி நேர வரிவிளம்பரம்

### தேவை

எமது உற்பத்திப் பொருள்களை யாழ்.குடா நாட்டிலும், ஏனைய இடங்களிலும் வானில் சென்று விற்பனை செய்யக்கூடிய வியாபாரத்துறையில் முன் அனுபவமுடைய விற்பனை பிரதிநிதிகள் தேவை. அடிப்படைச் சம்பளத்துடன், கொமிஷனும், பட்டாவும் வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும் Rolax Industries, றெலக்ஸ் இன்டஸ்றீஸ், 222A, கஸ்தூரியார் வீதி,ராதிகா ஜூவலர்ஸ் மேல்மாடி], யாழ்ப்பாணம்.

சி-9949


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### கதிரவேலு நல்லையா

தோற்றம்: 10-08-1922
மறைவு: 3-07-1986

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற கொள்கையை கருத்தாகக்கொண்டு கண்ணை இமைகாப்பது போல் எம்மைக் காத்து வளத்த ஆளாக்கிய எம் தந்தையே வாழ்க்கையில் துன்பம் ஒருபாதி இன்பம் மறுபாதி ஒருபாதியை பூமியில் அனுபவித்துவிட்டு மறுபக்கத்தை சொர்க்கத்தில் அனுபவிக்க அழைத்துக்கொண்டாளே உங்கள்ஆசைக் கனவுகள் நினைவாகவும் உங்கள் நினைவுடனே காலமெல்லாம் வாழ்ந்திடுவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்ருேம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரபபிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்ருர், உறவினர்,
நண்பர்கள்.
நல்மணிவாசா,
மானிப்பாய் வடகிழக்கு,
ஆனந்தாவீதி.

[சி-9953]

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பையா சரவணபவன்

(இளைப்பாறிய முன்னுள் இலங்கை சிவில் சேவை உத்தியோகத்தர்)

தோற்றம்: 16-09-1906
மறைவு: 01-08-1986
திதி: 21-07-1987

'தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்ற வள்ளுவரின் வாய்மொழியை வாழ்வினிற் கடைப்பிடித்து எம்மையெல்லாம் இந்த உயர்வான நிலைமைக்கு உயர்த்திவைத்த உத்தமரே. அன்பென்னும் அகல் விளக்கில், பண்பென்னும் திரியிட்டு, கடமையென்னும் நெய்யூற்றிக் கண்ணியமாய்ச் சுடர் வீசிப் பெருமையுடன் நாம் வாழ வழி வகுத்த பெருந்தகையே ஆருக நம்கண்ணில் ஊற்றெடுத்த கண்ணீர்தான் ஆறிடு முன்னரே ஆண்டொன்றுவந்ததுவே ஆண்டொன்று சென்ருலும், ஆற்றெணுத் துயரோடு சரவணபவனேடும் சரணடைந்த உமது ஆத்மா சாந்திபெற என்றும் பிரார்த்தித்து நிற்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(சி 9950)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



### திருமதி இராசேந்திரம் பொன்னம்மா

[அன்னம்] ஆசிரியை
[கட்டப்பிராய்
கல்வியங்காடு]
திதி: ஆடிமாத அபர பக்க ஏகாதசி

சென்ற 12-8-1985 ல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகுஎய்தி இன்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எத்தனை ஆண்டுகள் சென்ருலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலது உங்கள் ஆத்ம சாந்திக்கு உங்கள் குலதெய்வமாகிய வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மனின் திருவருளைவேண்டிப் பிரார்த்திக்கிருேம்..

இராசேந்திரம்,
இராசலிங்கம்
குடும்பத்தினர்.

[சி-9952]

## டாக்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசியநாடுகளை சேர்ந்த குழுவினர் விரைவில் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சமாதான பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த 9ந் திகதி இலங்கை வந்த இந்தியப் பிரதிநிதி டாக்டர் அறம்தலைமையிலான இக்குழு ஜனதிபதி, அமைச்சர்கள், எதிர்கட்சி உறுப்பினர்களையும் மற்றும் பல முக்கிய பிரமுகர்களையும் சந்தித்தபின் நேற்றுமுன்தினம் புதுடில்லி திரும்பியது.

இக்குழுவில் இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேஸியா, நேபாளம், தாய்லாந்து, ஜப்பான், கொரியநாட்டு பிரதிநிதிகளே கலந்து கொண்டனர். [சி]

# "அகதிகளாகவந்த மாணவர் கல்வியைத் தொடரமுடியாதநிலை"

## பாடநூல், சீருடை எதுவும் இல்லை

வடமராட்சி அகதிகள் — 7

கா. யோகநாதன்


கொடிகாமம் அரசினர் மகாவித்தியலய அகதிகள் முகாமில் ஒரு மாதத்திற்கு மேலாக அகதிகள் தங்கியிருக்கின்றனர். வடமராட்சியில் முதலாவது 'ஒப்பரேஷன்' நடந்தவையுடன் வெளியேறிய சில குடும்பங்கள் இன்னும் அங்குதங்கியுள்ளன. அவர்களுடன் நெல்லியடி சம்பவத்தின் பின் வெளியேறிய சில குடும்பங்களும் தங்கியுள்ளன.

நாங்கள் சென்றது ஒருவெள்ளிக்கிழமை. அன்று பாடசாலை தினம் அகதிகள் ஒரு கட்டடத்தில் இருந்தனர். மற்றக் கட்டடத்தில் வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அகதிகள்தங்கியிருப்பதால் ஒரு பகுதியில் மட்டும் வகுப்புகள் நடைபெறுவதாக அங்குள்ள ஆசிரியை தெரிவித்தார்.

மாணவர் வருகை மிகவும் குறைவாக இருந்தது. ஒரு வகுப்பறை, இரண்டு மூன்று ஆசிரியைகள் இருந்தனர்.

### பாடங்களை அவதானித்தனர்

உள்ளே வகுப்பு நடந்தது. வெளியில் சிலசிறுவர்கள்நின்று உள்ளே நடந்த பாடங்களை அவதானித்தனர். அவர்கள் வடமராட்சியிலிருந்து அகதிகளாகவந்த மாணவர்கள். அவர்கள் உடை அழுக்காக இருந்தது.



அகதிகளாகி விட்ட மாணவர்கள்

அருகிலுள்ள அரங்கிலும் வகுப்பு நடைபெற்றது. அந்த வகுப்பில் நடந்த பாடங்களையும் அகதிகளாக வந்த சில மாணவர்கள் அவதானித்தபடியிருந்தனர்.

### கல்விப் பகுதி அவதானித்ததாகத் தெரியவில்லை

அந்த மாணவர்கள் அகதிகளாக வந்து ஒரு மாதமாகிறது. உடுத்த உடையுடன் வெளியேறிய அவர்களிடம், பாடநூல் இல்லை, சீருடை இல்லை, பள்ளியும் இல்லை; படிப்பும் இல்லை. கல்விப்பகுதியினர் இதுபற்றி கவலைப்பட்டதாகத்தெரியவில்லை கவனித்ததாகவும் தெரியவில்லை.

கல்வியில் முதலிடம்வகிக்கும் வடமராட்சி மாணவர்கள், இன்று கல்வியைஇழந்துள்ளார்கள். இந்த மாணவர்களைத் தென்மராட்சி பாடசாலைகளில் சேர்க்கமுடியாதா? கல்வி அதிகாரிகள் கண்களில் இவர்கள் படவில்லையா? வடமராட்சி மாணவர்கள் எங்கெல்லாம் அகதிகளாக இருக்கின்றார்களோ, அங்குள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக சேர்க்கலாமே? இதுபற்றிக் கல்விப் பகுதியினர் கவனிக்க வேண்டும். உணவு, உடை கொடுத்தால் மட்டும் போதாது. கல்வியும் அவசியம்.

பொது ஸ்தாபனங்கள் இம் மாணவர்களுக்கு பாடநூல், சீருடைகளை வழங்க முன்வர வேண்டும். அகதிகளாக வந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட வடமராட்சி மாணவர்கள் வடமராட்சிக் கல்லூரிகளில் கல்வியின்றி இருக்கிறார்கள். இவர்கள் தற்காலிகமாக அவர்கள் தங்கியிருக்குப் பகுதிகளில்கல்வி கற்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

இங்கு மட்டுமல்ல மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், ஒரு கட்டிடத்தில்அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். மற்றப் பகுதியில் வகுப்பு நடைபெறுகிறது. வேறு சில பாடசாலைகளிலும் இப்படி நடக்கிறது. அகதிகளாக வந்துள்ள மாணவர்கள் அங்கு படிக்கலாமே. கொழும்புக்கு அகதிகளாக சென்றுள்ள மாணவர்கள் அங்கு பயில ஏற்பாடு செய்யப்படுகிறது. அப்படி இங்கும் செய்யமுடியாதா?

துன்னாலையைச் சேர்ந்தவர் கோகிலம் வயது 55. ஒரு மாதத்திற்கு முன் வந்தவர். பயங்கரமான ஷெல் அடி. அதற்குப் பயந்து வந்ததாகத் தெரிவித்தார். இவருடன் 6பேர் வந்திருந்தனர். நிலைமை சீரானால், திரும்பலாம் என்றார்.

நெல்லியடிச் சம்பவத்தின் பின் வந்திருந்த ஒரு குடும்பத்தைச் சந்தித்தோம். இக் குடும்பத்துடன்ஒருமாணவரும் வந்திருந்தார். வடமராட்சி ஒப்பரேஷனுக்கு பின், அங்கு பாடசாலை நடக்கவில்லை என்றார். ஒரு மாதம்வரை வீட்டிலிருந்ததாக கூறினார்.

### 75 பாடசாலைகளும் இயங்கவில்லை

சில வாரங்களுக்குமுன் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை சந்தித்தேன் வடமராட்சியில் உள்ள 75 பாடசாலைகளும் இயங்கவில்லை என்று கூறினார். மாணவர்களைப் பெற்றோர் அனுப்புவதற்கு தயங்குவதாகவும் தெரிவித்தார்.

### ஆசிரியர்களுக்கு விசேட லீவு?

ஆசிரியர்கள்கூட அங்கு பாடசாலைக்கு செல்வதில்லை. பல ஆசிரியர்கள், அகதிகளாக குடும்பங்களுடன் வெளியேறி விட்டனர். இவர்களுக்கு விசேட லீவு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்போவதாக ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவர் கடந்தவாரம் தெரிவித்தார். சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வானொலி வடமராட்சி மாணவர்களைப் பாடசாலைக்கு வருமாறு பலதடவை வேண்டுகோள் விடுத்தது. ஆனால் மாணவர்கள் எவரும் செல்லவில்லை பார்த்த இடத்தில் சூடு கண்ட இடத்தில் கைது என்று நிலைமை இருக்கும்போது எப்படி மாணவர்கள் செல்வார்கள்? வடமராட்சியில் ஒரு மாதம்வரை பாடசாலைகள் இயங்கவில்லை. அதன் பின் நெல்லியடி சம்பவத்தின் பின், 90சத வீதமான மக்கள் வெளியேறிவிட்டனர். இதன் பின் பாடசாலை நடக்கவே வாய்ப்பில்லை. மாணவர் முற்றாக வெளியேறிவிட்டனர்.

துன்னாலையைச் சேர்ந்த வரலட்சுமி. வயது 55. பெருப தஞ்சக்கேடு. நடக்கமுடியாது நாரி உளைவு என்றார். இந்த முகாமிலும் சிகிச்சை நிலையம் இல்லை. முதல்உதவி வசதிகளும் கிடையாது டாக்டர் எவரும் வருவதில்லை.

மிருசுவில் அரசினர் ஆஸ்பத்திரி அருகாமையில் உள்ளது அங்குதான் இந்த அகதிகள் சென்று சிகிச்சை பெறுவது வழக்கம் ஆனால் சிலநாட்களில் அகதிகள் செல்லும் நேரங்களில் டாக்டர் இருக்கமாட்டார் தாங்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதாக அகதிகள் தெரிவித்தனர்.

தென்மராட்சியிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர்களும் வந்ததாக அகதிகள் தெரிவித்தனர். முகாம்களில் சிகிச்சை நிலையங்கள்; மருந்து வசதிகள் எதுவும் இல்லை என்பது தெரிந்தவிடயம் இந்திய கப்பலில் மருந்துகள் வந்துள்ளன. இந்த மருந்துகளில், சிறிய அளவாவது, அகதிகள் முகாம்களுக்குப்போய்ச் சேரவேண்டும். இதனை செஞ்சிலுவைச் சங்கத்தினர் கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

[தொடரும்]

---

## நிவாரணம் கிடைக்கவில்லை

பலாலி, திங்கள்

வடமராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுள் அதிகமானோர் அகதிகளாக அளவெட்டிப் பகுதியிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுள் பெரும்பாலானோர் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர். இவர்கள் எவ்வகையிலும் எதுவித நிவாரணமும் பெறமுடியாத நிலையில் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

---

## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

மானிப்பாய் இந்துக்கல்லூரி தொழில்நுட்பப்பிரிவு அபிவிருத்தி ஆண்டையொட்டி பட்டமளிப்புவிழா நாளைபுதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி மஸ்கன் தொழில்நுட்பக்கூடத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில், கலைநிகழ்ச்சிகளும் தேநீர்விருந்துபசாரம் ஆகியன இடம்பெறவுள்ளன. [மா]

---

## படையினரின் வேட்டுக்கு விவசாயி பலி

மாவிட்டபுரம்,திங்கள்

கருகியநிலையிலுள்ள தமது வெற்றிலைக் கொழுந்துகளை பார்த்துவரச்சென்ற விவசாயி ஒருவர் இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமானார்

கொல்லங்கலட்டி கிளாலையைச் சேர்ந்த சின்னத்துரை காங்கேசன் (29 வயது) என்பவரே இவ்வாறு மரணமானார்.

தமது வெற்றிலைக் கொழுந்துகள் கருகி அழிவதாக ஏனையோர் கூறியதையடுத்து மனம் பொறுக்காமல் அவற்றைப் பார்த்து நீர்ப்பாய்ச்சுவதற்காக சென்ற சமயம் ஹாபர் வியூ இராணுவ முகாம் பக்கமிருந்து வந்த துப்பாக்கி வேட்டால் அவர் வயிற்றிலும், கைகாலிலும் காயமடைந்து உடனடியாக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்குமரணமானார். [ரா]

---

## பாராட்டு விழா



பளை மகா வித்தியாலய குழுச் சாரணர் தலைவர் மா. புவனேந்திரனுக்கு இன்று பளை மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தலைமையில் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

இவர் சாரணர் சேவையில் 35 வருடங்கள் சேவை புரிந்து அகில இலங்கை ரீதியில் 3 மெரிட் இடத்தையும், 2 இரண்டாம் இடத்தையும் 5 முதலாம் இடத்தையும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு சுவிகரித்துக் கொடுத்துள்ளார்

1986ம் ஆண்டு தேசிய சாரணர் வாரத்தின் தொழிற்பாட்டில் பளை மகா வித்தியாலயம் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை சுவீகரித்த பெருமைக்கு உழைத்தவர். இவர் 1984ம் ஆண்டு இலங்கை குழுவின் தலைவராக ஜப்பான் சாரணர் ஜம்போறிக்கு சென்று இலங்கைக்கு பெருமை தேடிக் கொடுத்தார்.

அன்ரன்.

---

## உடுபிடவை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும்அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு உடுபிடவைகளை வழங்க யாழ். ரோட்டறிக் கழகம் தீர்மானித்துள்ளது.

புதிய, பாவித்த உடைகளை வழங்க விரும்புபவர்கள் எஸ். உருத்திரலிங்கம், சமக்கொன் நிறுவனம், மின்சாரநிலைய வீதி, எனும் விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு இக்கழகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஊ]

---

## வவனியாவில் கற்பகம்

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் பொது மக்கள் பனம் பொருள்களை இலகுவாக வாங்குவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் வசதிசெய்து கொடுக்கும் முகமாக வவனியாவில் கற்பக விற்பனை நிலையமொன்றை இலங்கை பனை அபிவிருத்திச் சபை திறந்துள்ளது. இக் கற்பகம் விற்பனை நிலையம் கடந்த 12ம் திகதி வவனியா சந்தையில் வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரனினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இக் கற்பகம் விற்பனை நிலையம் கண்டி, திருகோணமலை. மலையகப் பகுதிகளுக்கும் பனம் பொருள்களை விற்கவும்சந்தைப்படுத்தவும் மையமாக விளங்கும் என்றும் இதன்மூலம் பனம் பொருள் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் சகலரும் பனம் பொருள்களைத் தட்டுப்பாடு இல்லாமல் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. நடராசா தெரிவித்தார்.

---

## நன்றியும் பாராட்டும்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வடஇலங்கை ஹோமியோபதி வைத்தியர் சங்கம் இராணுவத் தாக்குதல்களினால் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகியிருக்கும் யாழ். குடாநாட்டு மக்களுக்குஇந்திய அரசும், தமிழக மக்களும் உணவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியதற்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை அண்மையில் யாழ். நகருக்கு வருகை தந்திருந்த இந்திய தூதரகத்தைச் சேர்ந்த திரு. பூரியிடம் நேரடியாக சந்தித்து கையளித்துள்ளது.

சங்கத் தலைவர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் சென்ற சங்க தூதுக் குழுவினர் திரு பூரியை நேரில் சந்தித்து இந்திய மத்திய அரசுக்கும், தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன், மற்றும் தமிழக மக்களுக்கும் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்ததற்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் மேற்படி கடிதத்தை கையளித்தனர்.

# யாழ். குடா மக்களுக்கு விசேட அடையாளஅட்டை

## இராணுவ வானொலி அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ். யாழ். குடாநாட்டில் உள்ள 15க்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சகலருக்கும் விரைவில் இராணுவம் அடையாள அட்டைகளை வழங்கும்.

இவ்வாறு யாழ்ப்பாண வானொலி தனது அறிவிப்பில் தெரிவித்தது.

இவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் இவ்வானொலி தெரிவித்தது.

இதேவேளையில் வடமராட்சியில் உள்ள இவ்வயதினருக்கான விசேட அடையாள அட்டைகள் கடந்த 18ம் திகதி முதல் நேற்றுவரை வழங்கப்பட்டதென்றும் அவ் வானொலி தெரிவித்தது.

---

9 கிராம சே. அ. பிரிவில்

## வறுமை நிவாரண உணவு முத்திரைகள்

பண்டத்தரிப்பு, திங்கள். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒன்பது கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் தற்போது துரிதகதியில் அவ்வப்பகுதிக் கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஒருவருட காலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய இந்த வறுமை நிவாரண முத்திரைகள் தற்போது சற்றும் காலதாமதமாக விநியோகிக்கப்பட்டபோதிலும் கடந்த ஜூன் மாதத்திற்கும் இந்த ஜூலை மாதத்திற்குமான பொருள்களை ப. நோ. கூ. சங்கக்கடைகளில் இதனைச்சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும் என்று இது பற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கான வறுமை நிவாரண உணவு முத்திரைகள் யாவும் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் மக்களுக்கு விநியோகிக்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

---

## நிவாரணப் பொருள் களஞ்சியம்

[கொழும்புத்துறை நிருபர்]

யாழ் மாவட்டத்திற்குக் கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்டுள்ள இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் அனைத்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய உணவுப் பொருள்கள் விநியோகம் சகல உதவி அரச அதிபர் பிரிவுகளிலும், செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்பார்வையில் நடைபெறுகின்றது என்று அரசாங்க அதிபர் வை. மு. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

---

## அரும்பணிஆற்றிய அதிபர்



மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையின் கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றிய திரு. அ. க. பெர்னுன்டோ கடந்த 18ந் திகதியுடன் தமது 60வது வயதில் பதவியில் இருந்து இளைப்பாறியுள்ளார். இவர் அதிபர் தரம் ஐந்துக்கு தெரிவு செய்யப்பட்டவர். ஆரம்பக் கல்வியை கம்பத் திரிசியார் பாடசாலையில் பயின்று எஸ். எஸ். சி. ஆங்கில விஞ்ஞான பாடங்களில் தேர்ச்சி பெற்று 1949ம் ஆண்டு ஆங்கில விஞ்ஞான ஆசிரியராக நியமனம்பெற்றார். 1953-1655 வரை ஆசிரியர் பயிற்சி பெற்று சித்திர ஆசிரியர்தேர்விலும் சித்திபெற்றார். ஆசிரிய ஆலோசகர் தராதரப் பத்திரம் பெற்ற இவர் 1972ல் அதிபராக புதுக்குளம்உயர்தர வித்தியாலயத்தில் பதவி பெற்றார். மாணவர்களின் ஒழுக்கத்தில் கண்ணும் கருத்துமாய் உள்ள இவர் தொழிலாளர் நலனிலும் கூடிய அக்கறை கொண்டவர். இலங்கை ஆசிரிய சங்கத்தின் வவனியாக் கிளைச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டவர். பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு உழைத்தவர். யாழ். சென். அன்ரனிஸ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்து அதன் தலைவராகவும் பணியாற்றியவர். தற்போது உடுவில் ஐக்கியநாணய சங்கத் தலைவர் ஆகவும் சுன்னாகம் பிரஜைகள் குழுவின் முக்கிய அங்கத்தவராகவும் சேவை ஆற்றுகிறார். அவரது சேவையைப் பாராட்டிஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டு விழா ஒன்றை நடாத்த முற்பட்டுள்ளனர்.

**கௌரி கணேஷநாதன்,**

---

## வீடுகளுக்கு திரும்பியவர்கள் மீது ஷெல் தாக்குதல்

கொழும்புத்துறை, நிருபர்

யாழ்ப்பாண வானொலியின் அறிவிப்பைக் கேட்டு வரணியிலிருந்து வடமராட்சியிலுள்ள தமது வீடுகளுக்குத் திரும்பிய அகதிகளை நோக்கி ஷெல்தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டதால் வீடு திரும்பிய அகதிகள் தமதுயிரைக்காக்க திரும்பி ஓடவேண்டிய நிலைக்குள்ளானார்கள்.

தில்லையம்பலப்பிள்ளையார் கோவில் வயல் வெளியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த அகதிகளுக்கு பின்னால் ஷெல் விழுந்துவெடித்ததாம். உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி ஒருவரும் இப்பயங்கர அனுபவத்துக்குள்ளானார்.

---

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு நிருபர்)

சில்லாலை சென். ஜேம்ஸ் தேவாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சங்கானை நிற்சாமம் விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்ட தொழிலதிபர் திரு. க. கனகராசா அங்குள்ள அகதிகள் குடும்பங்களுக்குச் சவர்க்காரம், துவாய்கள் ஆகியவற்றையும், சிறுவர்களுக்கு அப்பியாசக்கொப்பி வாய்ப்பாடு மட்டை மற்றும் பிரசுரங்களையும் அன்பளிப்புச் செய்தார்.

---

## சத்திர சிகிச்சை பிரிவு

(மன்னார் நிருபர்)

மன்னார் ஆதார வைத்தியசாலையில் நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் சத்திரசிகிச்சைப் பிரிவு செயல்படத்தொடங்கியுள்ளது.

---

## கொள்ளைக் கோஷ்டி கைது

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சிப் பகுதியில் பரவலாக இடம்பெற்றுவந்த கொள்ளைகளுக்குப் பொறுப்பான கொள்ளைக் கோஷ்டிஒன்றின் தலைவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரும், அவரது சகாக்களும கைதாகியுள்ளனர்.

கிளிநொச்சி நகரிலும் அடுத்துள்ள கிராமங்களிலும் அடுத்தடுத்து இந்த ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டியினர் நகைகள், பணம், மற்றும் பொருள்களை இரவுவேளைகளில் கொள்ளையடித்து வந்தனர்.

---

## நகைகள் பணம் கொள்ளை

(மாவிட்டபுரம் நிருபர்)

வீட்டிலுள்ளவர்களை மின்வயர் கொண்டு தாக்கி அவர்களிடமிருந்து பெறுமதி வாய்ந்த பொருள்களைக்கொள்ளையடித்தனராம்.

மயிலிட்டியைச் சேர்ந்த காசிப்பிள்ளை கைலைநாதன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மயிலிட்டி காசநோய்த் தடுப்பு வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள இவ்வீட்டுக்குச் சென்ற நபர்கள் அரைகுறையான சிங்களமொழியில் பேசி வீட்டுக்காரரையும் மனைவியையும் மின்வயரால் தாக்கிவிட்டு 510 ரூபா ரொக்கப் பணத்தையும், உடுபிடவைகளையும், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வைரத்தோட்டையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகிவிட்டனராம்.

இதுகுறித்து இளைஞர்கள் குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

---

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 5 (21-7-1987)
கிழமை- செவ்வாய்
திதி- ஏகாதசி
நட்சத்திரம்- கார்த்திகை மேல் ரோகினி

மேடம்: குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும். வாழ்விலும் அமைதி குலையும் பொருள் விரயமுண்டாம்.

இடபம்: உறவுகளில் பிரிவு தோன்றும். உற்சாகம் குன்றும். குறுக்கு வழிகளை நாட வேண்டாம்.

மிதுனம்: புதுவழிகளிலும் பண வருவாய் ஏற்படலாம். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு ஆசிரியர்களுக்கு மகத்தான தினம்.

கடகம்: கடற்றொழில் புரிவோர் அவதானம் வேண்டும். எதிர்பாராத விபத்தும் ஏற்படலாம். கடமையிலும் கவனம் செலுத்தவும்.

சிங்கம்: அறவழிகளை மனம் நாடும் சுற்றுடலிலும் மதிப்புயரும். தாய்வழியாலும் தனம் சேரும்.

கன்னி: நீண்டநாள் பிணி இன்று தீரும். விவசாயிகள் விருத்தி பெறுவர். நற்செய்தியும் கிட்டும்.

துலாம்: உடல் நிலை குன்றும் கடமையிலும் விவாதங்கள் ஏற்படும். இடப்பிரிவும் ஏற்படலாம்.

விருச்சிகம்: பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் சேர்வர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தோன்றும். வணிகர்கள் வழமான வாழ்வு பெறுவர்.

தனுசு: பணம் பறிபோவதற்கு இடமுண்டு. முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும்.

மகரம்: பிதாவழியிலும் நன்மை கிட்டும். தன் தொழில் விருத்திபெறும். புண்ணிய விருப்பும் மேலிடும்.

கும்பம்: புதிய தொழில் சீர் பெறும் சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம் வாகன நலனுமுண்டாம்.

மீனம்: பிற ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். தலைமைப்பீடமும் கிடைக்கலாம். உயர் கல்வி நாட்டமுண்டாம்.

**திருமலை ரவீந்திரன்**

---

கட்டுவன்புலம்

## ம. வி. மீண்டும் இயங்குகிறது

பலாலி, திங்கள்

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருந்த கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் இக்கிராமத்திலிருந்து வேறிடங்களுக்கு அகதிகளாக சென்றுள்ளதால் மிகக்குறைந்தளவு மாணவர்கள் இப்பாடசாலைக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் மூடப்பட்ட பல பாடசாலைகளுள் மீண்டும் இயங்குவது இப்பாடசாலையாகும். (மா)

---

## புதிய உணவு முத்திரைகள்

[மாவிட்டபுரம் நிருபர்]

வறுமை நிவாரண திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை கிராமசேவகர் பிரிவில் ஏற்கனவே உணவுமுத்திரை பெற்றிருந்த குடும்பங்களுக்கு புதிய உணவு முத்திரைகள் எதிர்வரும் புதன்கிழமை 22ம் திகதி வழங்கப்படவுள்ளன.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வைத்து இந்த உணவுமுத்திரைகள் வழங்கப்படுமென காங்கேசன்துறை கிராமசேவையாளர் முகனகநாயம் தெரிவித்துள்ளார்.

---

## மலேஷியாவில் கௌரவம்

யாழ்ப்பாணம்,செவ்.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சண்முகசுந்தரக்குருக்கள ஸ்ரீராஜக்குருக்கள் மலேஷியாவில் நான்கு ஆண்டுகளாக ஆற்றிய சைவ சமய சேவையைப் பாராட்டிய சபா மன்னர் அஸ்லாமஷா குருக்களுக்கு 'பி.ஜே.கே' விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

மலேஷியாவின் உயர் விருதான பி.ஜே.கே' விருதைப் பெற்ற முதலாவது இலங்கையரான ஸ்ரீராஜக்குருக்கள் ஆஸ்திரேலியா, லண்டனிலும் சமய சேவைகளை மேற்கொண்டிருந்தார்.

அடுத்த ஆண்டு லண்டனில் ஹூட்டன் முருகன் கோவிலில் நடைபெற உள்ள கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஸ்ரீராஜக்குருக்கள் மீண்டும் லண்டன் செல்கிறார்.

---

## அரண் அமைப்பு தீவிரம்

(ஒட்டுசுட்டான் நிருபர்)

ஆனையிறவு இராணுவ முகாமில் மேலதிக காவல் அரண்கள் அமைப்பதிலும் பழைய அரண்களைப் புனரமைப்புச் செய்வதிலும் பல இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

---

## பணம் மீட்பு

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு புனித பிரான்சீஸ் சவேரியர் தேவாலய பிரதான வீதியில் புனித சவேரியார் திரு குடும்பத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீட்கப்பட்டுள்ளது.

---

## முதலுதவிப் பயிற்சி

[பண்டத்தரிப்பு]

அராலி இந்துக் கல்லூரியில் சென். ஜோன் அம்புலன்ஸ் (சர்வதேச, படையின் முதலுதவி பயிற்சி வகுப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

படையின் பிரதேச அத்தியட்சகர் திரு. நா. போஜன் இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்துவைத்தார்.

அராலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்று அண்மையில் திரு. போஜனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

---

## இந்தியவிழாவில் விளையாட்டு வீரர்கள்

மாஸ்கோ,ஜூலை 20

சோவியத்யூனியனில் நடைபெறும் இந்திய விழாவில் 69 ஆண்களும், 23 பெண்களும் அடங்கிய இந்திய இளைஞர் குழுவினர் சுமார் 100 சோவியத நகரங்களில், மலலகம்பம், கபடி, கோ-கோ, களரிப்பயட்டு, சிலம்பம், பட்டம்விடுதல் முதலிய இந்தியாவின் தேசிய விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவர்.

'எமது குழுவினரில் பலர் இளைஞர்கள், ஆனால் பல்வேறு போட்டிகளில் அவர்கள் வெற்றபெற்றுள்ளனர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சில் நடைபெற்ற இந்திய விழாக்களில் அவர்கள் பங்கேற்றுள்ளனர்'' என்று இக்குழுவைச் சேர்ந்த திரு. ஸ்ரீவஸ்தவா கூறினார்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 21-7-87

'டேவிஸ்கிண்ண' போட்டிகள்

# மொஸாட்பாதுகாப்புடன் இந்தியாவுக்கு 12 பேர் இஸ்ரேலிய டென்னிஸ் குழு

## 300 இந்திய கமாண்டோக்களும் பாதுகாப்பளிப்பர்

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்தவாரம் ஆரம்பமாகும் 'டேவிஸ் கிண்ண' டென்னிஸ் போட்டியில் சலந்துகொள்ளும் இஸ்ரேலிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமொஸாட் படையினருடன் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இந்தியா வருகிறார்கள் இந்தியாவில் இவர்களின் பாதுகாப்பிற்காக 300 கமாண்டோக்கள் நவீன ஆயுதங்களுடன் கடமையிலீடுபடுத்தப் படுவார்கள்.

புதுடில்லியில் இப்போட்டி நடைபெறும். டில்லி லோன் டென்னிஸ் கிளப் மைதானத்துக்கு இதுகுறித்து ஏற்கனவே பலத்த பாதுகாபபளிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலிலிருந்து 12 பேரடங்கிய விளையாட்டு வீரர்கள்எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதுடில் வருகிறார்கள்.

புதுடில்லியில் இஸ்ரேலிய வீரர்கள் பங்குபற்றும் போட்டிகளில் மத்தியஸ்தர்களையும் பந்து சேகரிப்பாளர்களையும் தவிர பார்யையாளர் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவில் இவ்வீரர்களுக்கு இஸ்ரேல் எதிர்ப்பு நாடுகளின் உறுப்பினர்களால் உயிராபத்து ஏற்படுமெனக் கருதியே இவ்விதமான பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய வரலாற்றில் ஒருவிளையாட்டுக் குழுவுக்கு இவ்வாறான பாதுகாப்பு வழங்கப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது

(சி)

## பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், செவ்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலிருந்து க. பொ. த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை காலை யாழ். கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

## இராணுவ வாகனங்கள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை ஹாபர் வியூ இராணுவ முகாமுக்கு கடந்த புதன், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் 35நவீன ரக ராணுவவாகனங்கள்கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த புதன்கிழமை 25 வாகனங்களும், வியாழக்கிழமை 10 வாகனங்களும், பலாலியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரிவிக்சப்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரியில்

## நோயாளி,பார்வையாளரிடம சங்கிலி, காப்பு அபகரிப்பு

யாழ்ப்பாணம். செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிக் குழந்தை ஒன்றின் கையிலிருந்த ஆயிரம் ரூபா பெறுமதியானகாப்பும் நோயாளியொருவரைப் பார்க்கவந்த பெண் ஒருவரின் பத்தாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி ஒன்றும் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவங்கள் நேற்று இடம் பெற்றன.

இத்திருட்டு சம்பவம் பற்றி தெரியவருவதாவது: வடமராட்சியில் குடந்தனை என்ற இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் விமலரூபி என்ற ஒருவயதுக் குழந்தை வாந்தி காரணமாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று பகல்வேளை இக்குழந்தையின் கையிலிருந்த ஆயிரம் ரூபா பெறுமதியான ஒருகாப்பு திருடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மூளாய் கிருஷ்ணன் கோவிலடியைச் சேர்ந்த கந்தையா இலட்சுமி என்ற பெண் [65 வயது] யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் உறவினர் ஒருவரைட பார்த்துவிட்டு வெளிநோயாளர் பகுதியால் வெளியேவீடு செல்லவந்தபோது சாரமும் சேட்டும் அணிந்த இருஇனந் தெரியாத வாலிபர்கள வெளியில் ஷெல் அடிக்கிறார்கள். பின்பக்கத்தால் போகலாம் வாருங்கள் என அப்பெண்ணை ஆஸ்பத்திரி பிரேத அறைப் பக்கமாக உள்ள பாதைக்குக் கூட்டிச்சென்று அப்பெண்ணிடம்எமது 150 ரூபா பணத்தை திருடிக்கொண்டு செல்கின்ருய் எனக் கூறினர்களாம். அப்போது அப்பெண் தான் திருடவில்லை எனக்கூற அப்படியாயின் உனது சங்கிலியை கழற்றி சத்தியம் செய் எனக் கேட்டனராம். உடனே அப்பெண் தனது சங்கிலியைக் கழற்றிச் சத்தியம் செய்தபோது அதை பறித்துக் கொண்டு இருவரும் ஓடி மறைந்துவிட்டனராம்.

யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியில் இதேபாணியில் இடம் பெற்ற ஐந்தாவது சம்பவம் இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

(கு)

## இராணுவ

(1ம் பக்கத் தொடச்சி)

களுக்கு சென்றதாலும் மக்கள் நகரப்பகுதியில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதாலும் மேலும் மாநகர சபையின் வருமானம் பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

யாழ். நகரில் இயங்கிவந்த பத்து சினிமா தியேட்டர்கள் இயங்காமையினுல் அவற்றின் மூலம் கிடைத்து வந்த வருமானத்தில் முப்பது லட்ச ரூபாவும், சந்தைகள், வாகனப் பாதுகாப்பினுல் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் பத்து லட்சரூபாவும், சோலை வரி, லைசென்ஸ் கட்டணம் போன்றவற்றினுல் கிடைக்கப்பெற்ற வருமானம் இருபது லட்சத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வருடம் யாழ். மாநகரசபைக்கேற்பட்ட இந்தவருமான வீழ்ச்சி பற்றி யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உள்ளூராட்சி அமைச்சுக்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளிலிறங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வா)

## நிரந்தர சமாதான தீர்வுக்கு சகலரும் முன்வரவேண்டும்

### புதிய குருநாகல் ஆயர் வேண்டுகோள்

[கொழும்பு]

'இலங்கையின் இனப்பிரச்னைக்கு நீதி, உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிரந்தர சமாதான தீர்வொன்றை காண இந்நாட்டின்சகல பிரஜைகளும் முன்வரவேண்டும்.

இவ்வாறுகுருநாகலையில் முதலாவது கத்தோலிக்க ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அதிவண கலாநிதி ரேமன்ட் பீரிஸ் ஆயராக திருப்பலிப்படுத்தப்பட்டபோது நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். குருநாகலை புனித அன்னம்மாள் கல்லூரி மைதானத்தில்இவ்வைபவம் இடம் பெற்றது.

அவர் அங்குமேலும் பேசுகையில் 'வன்முறைகள் எதிர் வன்முறைகள் நடைபெறுவதையே காண்கின்றோம் ஆயினும் புத்ததர்மம், வேதங்கள், குரான், வேதாகம் ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள இந்த பூமியில் இந்தச்சம்பவங்கள் இடம்பெறுவதே துர்பாக்கியமானதாகும்.

பொறுமை, அமைதி நிரம்பியதாகக் கருதப்பட்ட எமது நாட்டில் இன்று ரத்தக்கறை படிந்துள்ளது. உதவியற்றநிலையிலுள்ள அகதிகளினதும், இறக்கும் நிலையிலுள்ள அப்பாவிகளினதும் வேதனைக் குரல்கள் நிரம்பிய காடாக இது மாறியுள்ளது. ஒருஐக்கிய நாட்டை கட்டியெழுப்ப நாம் எம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்'' என்றுகூறினர். (ஊ)

## சிவில் உடையில் ராணுவம் "சென்றி"

பலாலி, திங்கள்.

மாவிட்டபுரத்தை அண்டிய பகுதிகளில் தமது சென்றிகளில் இராணுவத்தினர் சிவில் உடையில் கடமையாற்றுகின்றனர்.

கடந்த சில நாட்களாக இவ்வாறு வழமைக்கு மாறாக சாரமும், சேட்டும் அணிந்து துப்பாக்கி ஏந்திய வண்ணம் ராணுவத்தினர் கடமையாற்றுகிறார்கள்.

வீடுபார்க்க செல்லும் மக்களை கண்டவுடன் இவர்கள் சுடுவதுடன், மக்கள் வாழும் பகுதிக்கு ஊடுருவ முயற்சி செய்வதாகவும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசநாயகி செல்வத்துரை

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த திருமதி இராசநாயகி செல்வத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நல்லதம்பி செல்வத்துரை (பிரதேச தபால் அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும் சியாமள U.K], விஜயலட்சுமி, அலர்மலா [சட்டத்தரணி], யசோதா [France] வெற்றிவேல் [France] ஆகியோரின் அன்புத்தாயாரும்த. பலேந்திரன் [U.K], என். செல்வராஜா (நூலகர், இவ்லின் இரத்தினம் நிறுவனம் திருநெல்வேலி], ச. கிருஷ்ணகுமார் [சட்டத்தரணி], அ. விஜயகுமார் (France), வெ. சகுந்தலாதேவி [France] ஆகியோரின் அன்புமாமியாரும், இராசலட்சுமி,செல்வரட்ணம்,அமிர்தலிங்கம், கிரிதரன் ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரின் பூதவுடல் ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை மயானத்திற்கு (இன்று) 21-07-87 செவ்வாய்கிழமை பி. ப 3-00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்

தகவல்;

சி-9955 என். செல்வராஜா.

### கனகசபை குலவீரசிங்கம்



நந்தாவில் கொக்குவிலைச் சேர்நத கனகசபை குலவீரசிங்கம் நேற்றுக் (20-7-87) காலமானார். அன்னார் மருக்கொழுந்துவின் அன்புக் கணவரும். தேவ சகுந்தலா,குலேந்திரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் மகாவலி), தேவகுமாரி (ஜேர்மனி) கதிர்காமபாலன் (டிஸ்பென்சர் அரசினர் வைத்தியசாலை கிண்ணியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வல்லிபுரநாதன், புஸ்பராணி, பாக்கியநாதன் (ஜேர்மனி), யசோதரர் ஆகியோரின அன்பு மாமனாரும், தேவசகிலா, நித்திய குமணன், குலகுமணன், செந்தில் குமணன், பவகுணன், பாலகுமணன், குலதீபன், குலதீஸ், கனேஜன், பிரசன்ன ஆகியோரின் அன்பு பேரனும், பொன்னம்மா, சரஸ்வதி செல்லத்துரை, கண்மணி, கணேஷ், கோணேஸ், பாக்கியம் ஆகியோரின் சகோதரனும், மயில்வாகனம், கனகசபாபதி, முத்துராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் கொக்குவில் கிழக்கு நந்தாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்துஇன்றுபி.ப 2 மணியளவில் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றரும், உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(சி 9954) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு கனகசபை

கச்சாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வதிரியில் வசித்தவரும், கொழும்பில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவருமான முருகேசு கனகசபை இருதய நோயினுல் 12-7-87 ஞாயிறு பிற்பகல் 3-00 மணியளவில் காலமாகிவிட்டார். இவர் தங்கராணி கனகசபை (சங்கீத ஆசிரியை)யின் கணவரும், சிவரூபினி, சிவச்செல்வி ஆகியோரின் தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-9951)

### டாக்டர் திருமதி அருளம்பலம் மகேஸ்வரி

அரியாலையைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்தியகலாநிதி திருமதி மகேஸ்வரி அருளம்பலம் 15-7-87 அன்று லண்டனில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி தா. அருளம்பலத்தின் அருமை மனைவியும் காலஞ்சென்ற கு. முத்தையா, நவரத்தினம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும்,திருமதி மீரா, தெய்வேந்திரா, திருமதி அமிர்தா பசுபதி,அசோகன் ஆகியோரின் அருமைத் தாயாரும், குமாரசாமி, மகாதேவா, சிவப்பிரகாசம், திருமதி ஞானேஸ்வரி மகாதேவா ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-7-87 அன்று லண்டனில்நடைபெற்றன.

தகவல்: தாயார்.

63, ஆனந்தம் வடலி றேட்,
அரியாலை.

Mrs. Meera Theivendra,
26. Bouverie Road. W. Harrow,
Middle Sex, U. K.

(சி-9928)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone, — 22389, 24126.